பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**09 10 2026** **FRIDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

1. தமிழகம் மற்றும் மேற்குவங்க மாநிலங்களில் தலா இரண்டு சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் தமிழகத்தில் தவெக-வும், மேற்குவங்கத்தில் பிஜேபி-யும் முன்னிலை வகிக்கின்றன.

2. புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதியில் அகில இந்திய என் ஆர் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றுள்ளது.

3. பிரதேச ராணுவப்படையினர் வலிமையான சுயசார்பு இந்தியாவை உருவாக்க பங்களித்து வருவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

4. சிங்கப்பூர் சென்றுள்ள மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், அந்நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்த உள்ளார்.

5. **Lexington** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** - மொரோக்கோவின் **El Jardi** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் —

<<<<<>>>>>>

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள தட்டாஞ்சாவடி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் அகில இந்திய என் ஆர் காங்கிரஸ் வேட்பாளர் திரு அசோக் ஆனந்த் வெற்றிபெற்றுள்ளார்.

இவர், தமக்கு அடுத்தப்படியாக வந்த காங்கிரஸ் வேட்பாளர் திரு விநாயகத்தை 8 ஆயிரத்து 482 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றுள்ளார்.

திரு அசோக் ஆனந்த் 13 ஆயிரத்து 358 வாக்குகளையும், திரு விநாயகம் 4 ஆயிரத்து 876 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குகளும் எண்ணப்பட்டு வருகின்றன.

இந்த இரண்டு தொகுதிகளிலும் தமிழக வெற்றிக்கழக வேட்பாளர்கள் முன்னிலை பெற்றுள்ளனர்.

மதுராந்தகம் தொகுதியில் 7-ஆவது சுற்று முடிவில், தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் திருமதி மரகதம் குமரவேல், தமக்கு அடுத்தப்படியாக வந்த திமுக வேட்பாளர் திரு பரந்தாமனைவிட, 8 ஆயிரத்து 792 வாக்குகள் கூடுதலாக பெற்று முன்னிலை வகிக்கிறார்.

தாராபுரம் தொகுதியில் **12**-ஆவது சுற்று முடிவில், தவெக வேட்பாளர் திருமதி சத்தியபாமா, தமக்கு அடுத்தப்படியாக வந்த அஇஅதிமுக வேட்பாளர் திருமதி பானுமதியைவிட, **6** ஆயிரத்து **420** வாக்குகள் முன்னிலை பெற்றுள்ளார்.

அஸ்ஸாம் மாநிலம் **Nagaon** மக்களவை தொகுதியில் பிஜேபி வேட்பாளர் திரு **Devashish Sharma,** தமக்கு அடுத்தப்படியாக வந்த திரு **Mohammed Fakhruddin**, **AJMAL-ஐ,** விட கூடுதலான வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் தருவாயில் உள்ளார்.

மேற்குவங்க மாநிலம் நந்திகிராம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் **7**-ஆவது சுற்றில் பிஜேபி வேட்பாளர் திருமதி **Hasi Rani Rath, 59** ஆயிரத்து **540** வாக்குகள் முன்னிலை பெற்றுள்ளார்.

**Reji Nagar**-ல் தொகுதியில் **5**-ஆவது சுற்று முடிவில், பிஜேபி வேட்பாளர் திரு சங்கரவ் சர்கார் **34** ஆயிரத்து **501** வாக்குகள் கூடுதலாக பெற்று முன்னிலை வகிக்கிறார்.

<<<<<>>>>>>

பிரதேச ராணுவப்படையின் நிறுவன நாளையொட்டி, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், அப்படையினர் மற்றும் குடும்பத்தினருக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அனைத்துத் தரப்பு மக்களும் நாட்டிற்கு ராணுவ சேவையை உறுதிபாட்டுடன் அளிப்பதற்கு பிரதேச ராணுவம் வாய்ப்பளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் எல்லைப்பகுதிகள் பாதுகாப்பு, பேரிடர் நிவாரணப் பணிகள் உள்ளிட்டவற்றில் இப்படையினரின் பங்கு மகத்தானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அர்ப்பணிப்பு உணர்வோடு நாட்டு மக்களுக்கு தன்னலமற்ற சேவையை அளிக்கும் வீரர்களாக பிரதேச ராணுவத்தினர் செயல்படுவதாகவும், அவர்களின் சேவைக்கு தாம் தலைவணங்குவதாகவும் கூறியுள்ளார்.

மதிப்புமிக்க பிரதேச ராணுவப்படையினரின் பங்களிப்பு வலிமையான சுயசார்பு இந்தியாவை உருவாக்கிடும் என்றும் திரு ராஜ்நாத் சிங் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று காலை சிங்கப்பூர் சென்றடைந்தார்.

**Changi** சர்வதேச விமான நிலையத்தில் அங்குள்ள இந்திய தூதர் திரு **Shilpak Ambule** வரவேற்றார்.

இந்த பயணத்தின்போது சிங்கப்பூர் அதிபர் திரு தர்மன் சண்முகநாதன், பிரதமர் திரு லாரன்ஸ் வாங் மற்றும் அந்நாட்டு தலைவர்களை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து அவர் பேச்சு நடத்த உள்ளார்.

வர்த்தகம், முதலீடு, மின்னணு, டிஜிட்டல் நிதி, செமி கன்டெக்டர், தயாரிப்புத் தொழில் மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்டவற்றில் சிங்கப்பூருடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து திருமதி நிர்மலா சீதாராமன் பல்வேறு கட்டப் பேச்சுக்களை நடத்த உள்ளார்.

இந்தியாவில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து சர்வதேச முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் அதிபர்களையும் சந்தித்து அவர் பேச்சு நடத்துகிறார்.

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் அந்நிய நேரடி முதலீட்டில் சிங்கப்பூர் முக்கிய பங்காற்றுகிறது.

கடந்த **26** ஆண்டுகளில் **194** புள்ளி ஆறு எட்டு மில்லியன் டாலர் அளவுக்கு அந்நாட்டிலிருந்து அந்நிய நேரடி முதலீடுகளை இந்தியா பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<<>>>>>>

உலக அஞ்சல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அஞ்சல் சேவை - மக்கள் சேவை என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளையொட்டி, அஞ்சல் துறை பணியாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள அவர், தற்போதைய டிஜிட்டல் தகவல் தொடர்பு காலக்கட்டத்தில் இந்திய அஞ்சல் துறையும், டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பின்பற்றி, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற பாடுபட்டு வருவதாக கூறியுள்ளார்.

இந்திய அஞ்சல் துறை நாட்டு மக்களுக்கு தொடர்ந்து லாப நோக்கின்றி பணியாற்றும் என்றும் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது திரிபுரா மாநிலத்தில் உள்ள முன்னேற்றத்தை நாடும் மாவட்டங்கள் மற்றும் துடிப்பான கிராமங்கள்.

**(Voice Byte — 1.25 Sec.)**

*நிதி ஆயோக்கின் முன்னேற்றத்தை நாடும் மாவட்டங்கள் திட்டத்தின்கீழ் திரிபுரா மாநிலத்தில் உள்ள தொலைதூர **Dhalai** மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டங்களால் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.*

*தாய்-சேய் நலன், ஆரம்பக்கல்வி, நுண்நீர் பாசனத் திட்டங்கள் கிராமப்புற சாலை கட்டமைப்பு போன்றவற்றில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு, வளர்ச்சிப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*சமூக பொருளாதார ரீதியாக இம்மாவட்டத்தை உயர் நிலைக்கு கொண்டுவருவதற்கு இந்த திட்டம் பெரிதும் உதவியுள்ளது.*

*தேசிய அளவில் விரைந்து வளர்ச்சிபெறும் மாவட்டங்கள் பட்டியலில் திரிபுரா மாநிலத்தில் உள்ள மாவட்டங்களும் இணைந்துள்ளன.*

*இம்மாநிலத்தில் பங்களாதேஷை ஒட்டி அமைந்துள்ள ஊரகப்பகுதிகள், துடிப்பான கிராமங்கள் திட்டத்தின்கீழ், சமூக பொருளாதார ரீதியாக பெரிய மாற்றங்களை பெற்றுள்ளன.*

*இந்த கிராமங்கள் சுயசார்பு நிலையை எட்டுவதற்கு இத்திட்டம் பேருதவியாக அமைந்துள்ளது. இந்த கிராமங்களில் இணையதள கட்டமைப்பு, தரமான சாலைகள், அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு, சூரிய மின்சக்தி போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.*

*கிராமப்புற உள் கட்டமைப்பு, நீண்டகால வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளன.*

*உள்ளூர் கைத்தறி, சுற்றுச்சூழலுக்கு உகந்த சுற்றுலா, கைவினைப் பொருட்கள் உற்பத்தி போன்றவற்றின் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட்டுள்ளது என்பதை உறுதியாக கூறலாம்*

<<<<<>>>>>>

நடைபாதை வியாபாரிகளின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ், ஏராளமான வியாபாரிகள் பயனடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — கண்ணன் - 55 Sec. )***

<<<<<>>>>>>

அமெரிக்க தொழில்துறை முன்னோடிகளுக்கு அந்நாட்டு அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்டதற்காக வழங்கப்படும் இந்த விருதை **Space X** நிறுவனர் திரு ஏலான் மஸ்க், இந்திய வம்சாவளியை சேர்ந்தவரான மைக்ரோசாஃட் நிறுவன தலைமை செயல் அதிகாரி திரு சத்திய நாதெல்லா உள்ளிட்ட ஆறு பேர் பெற்றுக்கொண்டனர்.

<<<<<>>>>>>

**Lexington** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சகஜா எமளப்பள்ளி - மொரோக்கோவின் **El Jardi** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-2, 6-3** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Hina** — ஜப்பானின் **Yuki Naito** இணையை வென்றது.

------------

துருக்கியில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே — ஆஸ்திரேலியாவின் **Elena Micic** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

------------

போர்ச்சுக்கலில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

இந்தியா-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா-ஏ அணி சற்றுமுன்வரை **46** புள்ளி நான்கு ஓவரில் **8** விக்கெட் இழப்பிற்கு **253** ரன் எடுத்துள்ளது

புதுச்சேரியில் நடைபெறும் இப்போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

<<<<<**END**>>>>>